# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 165/2022

### 23.06.2025

### P.W.1- கொடியரசி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல்4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது அப்பாவுடைய சொத்து எனக்கு வேண்டும் என்று பரிகாரம் கேட்டு 9 சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண், நான்குமால்கள் பற்றி தெரியாது. எனது உடன்பிறந்த சகோதரர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்துகொண்டு எனக்கு தர மறுக்கிறார்கள். நான் திருமணம் முடிந்த நாளிலிருந்து என்னை தாவா சொத்தை அனுபவம் செய்ய விடவில்லை. எனது உடன்பிறந்தவர்கள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள். வழக்கு சொத்துக்கள் எனது பெற்றோர்களுக்கு பாத்தியப்பட்டது. அதில் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் இல்லை. எனது பெற்றோர்கள் கிரையம் வாங்கிய சொத்துக்களும் அடங்கும். பூர்வீக சொத்து என்று சொல்வது எனது தாத்தாவின் சொத்து என்றால் சரிதான். 1, 4, 7 இலக்க சொத்துக்கள் எனது அம்மா மாயக்காளுக்கு 17.10.1984ம் தேதிய கிரையப்பத்திரத்தின் படி பாத்தியம் என்றால் சரிதான். 3, 6, 9 இலக்க சொத்துக்கள் எனது அப்பா சோலைராஜுக்கு 04.08.1977ம் தேதிய கிரையப்பத்திரத்தின் படி பாத்தியம் என்றால் சரிதான். 2, 5, 8 இலக்க சொத்துக்கள் எனது அப்பா சோலைராஜுன் பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது தந்தையுடன் பிறந்தவர்கள் சூரத்தேவன், கோட்டையன் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் தவசித்தேவர் என்றால் சரிதான். 19.11.1976ல் எனது தாத்தா, எனது தந்தை, தந்தையுடன் பிறந்தவர்கள் சேர்ந்து 2, 5, 8 இலக்க சொத்துக்களையும், மற்ற சொத்துக்களையும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஒச்சம்மாள் என்பவர் எனது அப்பத்தா என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் மொத்தம் 18 இலக்க சொத்துக்கள் உள்ளன என்றால் தெரியாது. தாவா சொத்துக்களான 2, 5, 8 இலக்க சொத்துக்கள் உட்பட மொத்தம் 18 இலக்க சொத்துக்கள் எனது தந்தையின் பாகமாக கிடைத்தது என்றால் சரியல்ல. 18 இலக்க

சொத்துக்களையும் எனது தந்தையும், எனது சகோதரர்களும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது அப்பா கிரையம் வாங்கிய 3, 6, 9 இலக்க சொத்துக்கள் மற்றும் பூர்வீக சொத்துக்களான 2, 5, 8 இலக்க சொத்துக்கள் தவிர மற்ற 17 இலக்க பூர்வீக சொத்துக்களையும் எனது அப்பா மற்றும் எனது சகோதரர்கள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேறு சில சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 14.10.1997ம் தேதி எனது அப்பா, எனது சகோதரர்கள் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரைய பத்திரங்களில் நான் கையெழுத்து செய்யவில்லை. மேற்படி தேதியில் கிரையம் பெற்றவர்கள் பக்கத்து ஊர்க்காரர்கள் ஆவார்கள். ஏன் பக்கத்து ஊர்க்காரர்களிடம் கிரையம் சம்மந்தமாக முறையிடவில்லை என்றால் எனக்கு திருமணம் ஆனபிறகு எனக்கு அரிசி, பருப்பு எனது பெற்றோர்கள் கொடுத்தார்கள். எனக்கு திருமணம் செய்யும்போது 25 பவுன் தங்க நகைகள் மற்றும் அதன்பிறகு 11 பவுன் தங்க நகைகள் உட்பட மொத்தம் 46 பவுன் நகைகள் சீதனமாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. ரூ.3 லட்சம் மதிப்புள்ள பண்ட பாத்திரங்கள் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 2011ல் எனது தந்தை, தாயார், எனது உடன்பிறந்தவர்கள் அனைவரும் சேர்ந்து என் தந்தைக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்துக்களையும், எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்துக்களையும், பூர்வீக சொத்துக்களையும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு அப்போது தெரியாது. எனது அப்பா இறந்தபிறகு பத்திர அலுவலகத்திற்கு சென்றபின்தான் தெரியும். வழக்கிற்காக தற்போது தெரியவந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர்கள் கிரைய சொத்து பாகம் ஆனதால் அதில் நான் பங்கு கேட்கமுடியாது என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்து 4 வருடங்கள் ஆகிறது. பிரதிவாதிகள் பெயரில் பட்டா இல்லை, எனது பெற்றோர்கள் பெயரில் தான் பட்டா உள்ளது, 2011ம் வருட பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படியானது என்பதால் அதை செல்லாது என கூற எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான்

நேரில் சென்று பாகம் கேட்டேனா என்றால் இல்லை, நகை தான் கேட்டேன். நான் தாக்கல் செய்த நிருபணவாக்குமூலத்தில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறிய எந்த சங்கதியையும் மறுத்து கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 1/5 பாகம் கிடைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.